# மெட்ரோவில் இசை விழா

**சென்னை, ஜன. 28–**

கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்தில், வயலின் இசை கச்சேரி நேற்று நடந்தது.

சென்னை மெட்ரோ ரயிலின், நவீன தொழில் நுட்பம், இயக்கம், வசதிகள் மற்றும் பாதுகாப்பு குறித்து, பயணியருக்கு தெரிவிக்க ஏதுவாக, நிர்வாகம் சார்பில், பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதனையொட்டி, சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம், ஆன்மஜோதி அமைப்பு மற்றும் சத்திய பாமா ரோட்ராக்ட் சங்கத்தின் சார்பில், கோயம்பேடு மெட்ரோ நிலையத்தில், கர்நாடக இசை கலைஞர் சிரேயா தேவ்னாத் குழுவினரின் வயலின் கச்சேரி நேற்று நடந்தது.

மயிலை கார்த்திகேயன் நாதஸ்வரம், பிரவீன் மிருதங்கம், ஜீவானந்தம் தவில் வாசித்தனர்.

சத்யபாமா ரோட்ராக்ட் சங்கத்தினர், சென்ட்ரல் மெட்ரோ நிலையத்தில் இருந்து, விமான நிலையம் வரை, சிறப்பு பயணம் சென்று வந்தனர்.